# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை (ஆலையம்மன் கோயில் அருகில்),
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள்: 17.11.2020**

**முன்னிலை**

**திரு ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

..............

**வழக்கு எண். NC 2949/F/2019 (SA 6820/F/2019)**

திரு. கே. குப்பன் ... மேல்முறையீட்டாளர்

எதிர்

பொதுத் தகவல் அலுவலர் / செயற்பொறியாளர்,
இயக்கமும் & பராமரிப்பும்,
தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) பகிர்மான கழகம்,
இராணிப்பேட்டை, வேலூர் மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

பார்வை :-

| | |
|---|---|
| மனுதாரரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 13.05.2019 |
| முதல் மேல்முறையீட்டு நாள் – பிரிவு 19(1) | 13.06.2019 |
| மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு – பிரிவு 19(3) | 13.07.2019 |
| ஆணையத்தின் ஆணை நாள் | 28.11.2019 |
| ஆணை பெறப்படாத மனு நாள் | 16.12.2019 |

******

## ஆணை

இவ்வழக்கு ஏற்கனவே 28.11.2019 நாளிட்ட ஆணை வாயிலாக பொதுத் தகவல் அலுவலரை மேல்முறையீட்டாளர் கோரிய தகவல்களை 15 தினங்களுக்குள் வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. இவ்வழக்கு தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாத காரணத்தால் இன்று (17.11.2020) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மேல்முறையீட்டாளர் திரு. கே. குப்பன், வேலூர் மாவட்டம் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு தனசேகரன், பொதுத் தகவல் அலுவலர் / செயற்பொறியாளர், தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) பகிர்மான கழகம், இராணிப்பேட்டை, வேலூர் மாவட்டம் அவர்கள் ஆஜரானார்.

2. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 13.05.2019 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில் கீழ்க்கண்ட தகவல்கள் வழங்குமாறு கேட்டு பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட மேற்பார்வையாளர், தமிழ்நாடு மின்வாரிய அலுவலகம், காந்தி நகர், வேலூர் என விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார் :-

**1) வேலூர் மாவட்டம், வாலாஜா தாலுக்கா, பாகவெளி கிராமம், சின்னத் தெருவைச் சார்ந்த திரு. பா. திருமூர்த்தி என்பவர் இராணிப்பேட்டை மின்வாரிய அலுவலகத்தில் பணிபுரியும் பதவியின் பெயர் குறித்த விவரம் கோப்பின் அடிப்படையில் ஒளிநகல்,**

**2) மின்வாரிய பணிக்கு திரு. பா. திருமூர்த்தி தேர்வு செய்யப்பட்ட விதம் குறித்தும் அதை சார்ந்த ஆவணங்களின் நகல் கோப்பின் அடிப்படையில் ஒளிநகல் தேவை.**

**3) திரு. பா. திருமூர்த்தி என்பவர் மின்வாரிய அரசுப் பணியில் சேர்ந்த நாள் முதல் இன்றைய தேதி (13.05.2019) வரையில் அவர்மீது தங்கள் துறையிடம் அளிக்கப்பட்ட புகார் மனுவும் அத்துடன் இணைக்கப்பட்ட ஆவணங்களின் நகல் கோப்பின் அடிப்படையில் ஒளிநகல் தேவை.**

**4) திரு. பா. திருமூர்த்தி என்பவர் இராணிப்பேட்டை மின்வாரிய அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறார். இவர் மீது கடந்த 28.09.2018 அன்று அளிக்கப்பட்ட புகார் மனுவின் நகல் கோப்பின் அடிப்படையில் நகல் மற்றும் விசாரணை செய்திட்ட அதிகாரிகளின் பெயர் விவரம் குறித்த ஒளிநகல் தேவை.**

**5) திரு. பா. திருமூர்த்தி என்பவர் மீது கடந்த 28.09.2018 புகாரின் அடிப்படையில் விசாரணை செய்ய திரு. குப்பன் என்பவருக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையின் ஒளிநகல் தேவை.**

**6) திரு. பா. திருமூர்த்தி என்பவர் மீது கடந்த 28.09.2018 புகாரின் அடிப்படையில் விசாரணை 31.12.2018 அன்று இராணிப்பேட்டை மின்வாரிய அலுவலகத்தில் செய்யப்பட்ட விசாரணையின் அறிக்கை நகல், இந்த விசாரணையின் அறிக்கையை வேலூர் மேற்பார்வையாளர் அலுவலகத்திலிருந்து மேல் அதிகாரிகளுக்கு அனுப்பவேண்டிய தங்கள் அலுவலகத்தில் பணிபுரியும் அதிகாரியின் பெயர் மற்றும் பணி விவரம் குறித்த தகவல் கோப்பின் அடிப்படையில் நகல் தேவை.**

**7) தங்கள் மின்வாரியத் துறையில் இராணிப்பேட்டை உதவி செயற்பொறியாளர் அலுவலகம் (நகரம்) மற்றும் வேலூர் காந்தி நகர் மேற்பார்வையாளர் அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்களின் மீது புகார் அளிக்க வேண்டிய அலுவலகத்தின் முழு முகவரி குறித்த விவரம் தேவை.**

**3. பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் 16.05.2019 தேதியிட்ட கடிதம் வாயிலாக மேற்சொன்ன மனுவின் மீது உரிய நடவடிக்கைக்காகவும், தகவல்களை அளிப்பதற்காகவும், தகவல் அறியும் உரிமைச் சட்டம் பிரிவு 6(3)-ன் படி பொதுத் தகவல் அலுவலர்/ செயற்பொறியாளர், இ&ப, இராணிப்பேட்டை அவர்களுக்கு மாற்றம் செய்யப்பட்டு, 27.05.2019 தேதியிட்ட கடிதம் வாயிலாக பதில்** வழங்கியுள்ளார். மேல்முறையீட்டாளர் அவர்கள் தான் கோரிய தகவல் முழுமையாக **தனக்கு வழங்கப்படவில்லை என்றும், அவற்றை வழங்கக் கேட்டும், 13.06.2019 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவை பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு அலுவலருக்குத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் அவர்கள் தகவல் அளிக்காததால், மேல்முறையீட்டாளர் தான் கோரிய தகவல்களுக்கு தனக்கு முறையான தகவல்கள் எதுவும் வழங்கப்படவில்லை என்றும், அவற்றை பெற்று வழங்கவும் கேட்டு, பிரிவு 19(3)ன் கீழ் 13.07.2019 தேதியிட்ட மேல்முறையீட்டு மனுவை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அம்மனு மீது 28.11.2019 அன்று விசாரணை மேற்கொண்டு SA6820/F/2019 ஆணை வாயிலாக பொதுத் தகவல் அலுவலரை 15 தினங்களுக்குள் தகவல் வழங்க உத்தரவிடப்பட்டிருந்தது. பொது அதிகார அமைப்பினரால் தனக்கு உரிய தகவல் வழங்கப்படாததால் மேல்முறையீட்டாளர் 16.12.2019 நாளிட்ட மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அம்மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (17.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.**

4. இன்றைய தொலைபேசி விசாரணையில் ஆஜரான மனுதாரர், தான் கோரிய இனங்களுக்கான முழுமையான தகவல்களை பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக்கொண்டார்.

5. விசாரணையின்போது பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளர் கோரிய முழுமையான தகவல்களை 15 தினங்களுக்குள் மேல்முறையீட்டாளருக்கு வழங்குவதாக தெரிவித்தார்.

6. மேல்முறையீட்டாளரின் மனுவையும், பொதுத் தகவல் அலுவலர் அளித்த தகவல்களையும் ஆணையம் பரிசீலனை செய்ததில், மேல்முறையீட்டாளருக்கு உரிய, முழுமையான தகவல் வழங்கப்படாமல் உள்ளது தெரிய வருகிறது. உரிய தகவல் வழங்காத அலுவலரை ஆணையம் வன்மையாக கண்டிக்கிறது. விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கிறது:

- மேல்முறையீட்டாளருக்கு ஆணையத்தின் ஆணைக்குப் பிறகும் பதில் அளிக்காத அப்போதைய பொதுத் தகவல் அலுவலரை தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ25,000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 1 வார காலத்திற்குள் பதிவஞ்சல் மூலம் ஆணையத்திற்கு சமர்ப்பிக்கவேண்டும் என்றும் இப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.

- மனுதாரர்/மேல்முறையீட்டாளர் 13.05.2019 தேதியிட்ட மனுவில் கோரிய தகவல்களை விரிவாக மற்றும் முழுமையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 7(6)ன்படி கட்டணமின்றி பதிவுத் தபாலில் அனுப்பி வைத்து, வழங்கப்பட்ட தகவல் மற்றும் மேல்முறையீட்டாளர் ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலை இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்க தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.

- மேல்முறையீட்டாளர் 13.05.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவலை வழங்கத் தவறும்பட்சத்தில் பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20 (1) -ன்கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமென்று ஆணையம் எச்சரிக்கின்றது.

ஓம்/- (ச.த. தமிழ்குமார்)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண். NC 2949/F/2019 **(SA 6820/F/2019)**</u>

<u>பொது அதிகார அமைப்பு</u>

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர் / செயற்பொறியாளர்,
இயக்கமும் & பராமரிப்பும்,
தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) பகிர்மான கழகம்,
இராணிப்பேட்டை,
வேலூர் மாவட்டம்.

<u>மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்</u>
**திரு. கே.குப்பன்,**
**த/பெ. குள்ளப்பரெட்டி,**
**எண்.3/263,கங்கையம்மன் கோவில் தெரு,**
**வன்னிவேடு மோட்டூர்,**
**வன்னிவேடு அஞ்சல்,**
**வாலாஜா வட்டம்,**
**வேலூர் மாவட்டம் – 632 513.**

**Copy to: Judgement File/ Spare**
**JE /PA 19.11.2020**